செய்தி வெளியீடு எண் : 44 நாள் : 31.03.2019

***தேனி மாவட்டம்***
***பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019***
***வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.***

******

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திற்குட்பட்ட க.புதுப்பட்டி எஸ்.பி.எம்.ஜெய் டெக் இன்டர்நேஷனல் பள்ளியில் பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019 நடைபெறவுள்ளதையொட்டி, இன்று (31.03.2019) நடைபெற்ற வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் பொதுப் பார்வையாளர் திரு.உபேந்திர நாத் சர்மா, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட பின் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019 மற்றும் சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெறவுள்ளதையொட்டி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக்கு 160 இடங்களில் 313 வாக்குச்சாவடி மையங்களும், 199.பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு 115 இடங்களில் 296 வாக்குச்சாவடி மையங்களும், 200.போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்கு 144 இடங்களில் 314 வாக்குச்சாவடி மையங்களும், 201.கம்பம் சட்டமன்ற தொகுதிக்கு 119 இடங்களில் 295 வாக்குச்சாவடி மையங்களும் என மொத்தம் 538 இடங்களில் 1218 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு, வாக்காளர்கள் வாக்களிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், ஆண்டிபட்டி வட்டத்திற்கு அன்னை வேளாங்கன்னி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி அலுவலர்கள் 293, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-1) 307, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-2) 210, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-3 மற்றும் நிலை-4) 272, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-5 மற்றும் நிலை-6) 347, என மொத்தம் 1,429 அலுவலர்களுக்கும், பெரியகுளம் வட்டத்திற்கு மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி அலுவலர்கள் 229, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-1) 235, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-2) 240, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-3 மற்றும் நிலை-4) 203, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-5 மற்றும் நிலை-6) 248, என மொத்தம் 1,155 அலுவலர்களுக்கும், தேனி வட்டத்திற்கு கொடுவிலார்பட்டி கம்மவர் பொறியியல் கல்லூரியில் வாக்குச்சாவடி அலுவலர்கள் 234, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-1) 272, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-2) 270, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-3 மற்றும் நிலை-4) 354, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-5 மற்றும் நிலை-6) 335, என மொத்தம் 1,465 அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், போடிநாயக்கனூர் வட்டத்திற்கு முத்துதேவன்பட்டி தேனி மேலப்பேட்டை இந்து நாடார் மேல்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி அலுவலர்கள் 192, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-1) 231, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-2) 218, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-3 மற்றும் நிலை-4) 208, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-5 மற்றும் நிலை-6) 175, என மொத்தம் 1,024 அலுவலர்களுக்கும், உத்தமபாளையம் வட்டத்திற்கு க.புதுப்பட்டி எஸ்.பி.எம்.ஜெய் டெக் இன்டர்நேஷனல் பள்ளி, கம்பம் ராமஜெயம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி அலுவலர்கள் 516, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-1) 419, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-2) 526, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-3 மற்றும் நிலை-4) 482, வாக்குப்பதிவு அலுவலர்கள் (நிலை-5 மற்றும் நிலை-6) 357, என மொத்தம் 2,300 அலுவலர்களுக்கும், ஆகமொத்தம் 7,373 வாக்குச்சாவடி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, 127 மண்டல அலுவலர்களின் கீழ் முதற்கட்ட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, 07.04.2019 அன்று இரண்டாம் கட்ட பயிற்சியும், 13.04.2019 அன்று இரண்டாம் கட்ட மறு பயிற்சியும், 17.04.2019 மூன்றாம் கட்டத்திற்கான பயிற்சியும், தேர்தலின் போது எந்த வாக்குச்சாடியில் பணிபுரிய வேண்டும் என்பதற்கான ஆணையினையும் வழங்கப்படும்

வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்கும் நடைபெற்று வருகிறது. வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குச்சாவடியின் மொத்த பணிகளையும் மேற்கொள்ளப்பட வேண்டும். வாக்குச்சாவடிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்கள், காவல் துறையினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வசதி குறித்தும், வாக்குப்பதிவினை கண்காணித்திட பணியமர்த்தப்பட்டுள்ள வீடியோ ஒளிப்பதிவாளர்களின் வருகை குறித்தும் உறுதி செய்திட வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை கட்டுப்பாட்டு கருவிகளுடன் எந்த வித இடர்பாடுகளுக்கும் இடமளிக்காத வண்ணம் பொருத்தப்பட வேண்டும். வாக்குப்பதிவிற்கு தேவையான பொருட்களை சரிபார்த்து பெற்றுக்கொள்ள வேண்டும். வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு முன்பாக வாக்குச்சாவடி முகவர்களுக்கு சோதனை முறையில் விளக்கம் அளித்த பின் அனைவரின் ஒத்திசைவுடன் தயார் நிலைப்படுத்திட வேண்டும்.

மூடிமுத்திரையிடப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குச்சாவடி தொடர்புடைய அலுவலர்கள், வீடியோ ஒளிப்பதிவாளர்கள், முகவர்கள் முன்னிலையில் வாக்குப்பதிவிற்கு முன் திறக்கப்பட வேண்டும். வாக்குப்பதிவின்போது ஒவ்வொரு மணிநேரத்திற்கு ஒருமுறை வாக்குப்பதிவு விவரங்களை குறுஞ்செய்தியாக தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அனுப்பிட வேண்டும். முகவர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதுடன் அவர்களின் விருப்பப்படி மாலை 3 மணிவரை அனுமதித்திடவும், 3 மணிக்குமேல் உள்ள முகவர் இறுதிவரை மாற்றம் செய்ய அனுமதிக்கக்கூடாது. வாக்காளர்களுக்கு ஆண், பெண் என தனித்தனி வரிசைப்படுத்தி மறைவிடத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற வாக்களிக்கும் இயந்திரப் பகுதியினை அனுமதித்திட வேண்டும். வாக்குப்பதிவு முடிவுற்றவுடன் அனைத்துப்பொருட்களையும் விதிப்படி மூடி முத்திரையிட்டு, வாக்குப்பதிவு தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களின் நாட்குறிப்பினை தயார்செய்து அனுப்பிட வேண்டும். இப்பயிற்சி வகுப்பினை நல்ல முறையில் பயன்படுத்தி தங்களுக்கு நேரிடும் வினாக்களுக்கு தற்போது நிவர்த்தி செய்து கொண்டு, நேர்மையாகவும், எவ்வித பாகுபாடின்றியும் தேர்தல் பணியினை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆய்வின்போது, கம்பம் சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆர்.வைத்தியநாதன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கா.செந்தில்குமார், மண்டல தேர்தல் அலுவலர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**